மாரப்பாராட்டுகிறேன். நான் இறுதியாக ஒன்றைச் சொல்ல ஆசைப்படுகிறேன். மாநில சுயாட்சிபற்றி நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்கள் அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். இது அண்ணா அவர்கள் ஏற்கெனவே சொல்லிய ஒன்றுதான். நாம் கேட்பது மாநிலங்களுக்கு அதிகாரம் இந்தியாவிலுள்ள அத்தனை மாநிலங்களுக்கும் அதிகாரங்கள் என்று மிகத் தெளிவான வார்த்தைகளில், அண்ணா அவர்கள் சொல்லி யிருக்கிறார்கள். இது பிரிவினை கோஷமில்லை என்று மிகத் தெளி வாக அண்ணா அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். 1962-ல் வேலூர் கோட்டை மைதானத்திலே பேசும் பொழுது, "திராவிட நாடு பிரிவினை இல்லை; சுவர் இருந்தால்தான் சித்திரம் எழுத முடியும்" என்று வேலூர் கோட்டை மைதானத்திலே சீனா படை எடுத்தபொழுது சொல்லியிருக்கிறார்கள். அந்தச் சமயத்திலே இந்த நாடு ஒன்று, வீட்டிற்கு ஒரு வீரர் தேவை என்று சொன்னார்கள். பிரிவினை என்பதில்லை. மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும், நம்முடைய மாநிலத்திலே விளைகின்ற நெல்லுக்கு விலை நிர்ண யிக்கும் அதிகாரம் நமக்கு இருக்க வேண்டும், நமது தமிழர்கள் ஸ்ரீலங்காவுக்குப் போய்ச் சீரழிகிறார்கள். அந்தச் ஸ்ரீலங்காவை சிங்காரச் சோலையாக மாற்றிய தமிழன் அங்கே சிதைபடுகிறான், கஷ்டப்படுகிறான், கண்ணீர் வடிக்கிறான், "கள்ளத் தோணி" என்ற கேவலமான பட்டத்தோடு இருக்கிறான் என்றார். அப்படிப் பட்ட தமிழர்களுக்காகப் பேசுவதற்கு இந்தியா சார்பாக அனுப்பப் படுகின்ற தூதுவர் தமிழராக இருக்க வேண்டும் என்ற கோரிக்கையை நமது முதல்வர் அவர்கள் எடுத்து பிரதமரிடத்திலே சொல்ல வேண்டும் என்று கேட்டு, எனக்குப் பேச வாய்ப்பு இந்த அவையிலே கிடைத்ததற்காக நன்றி கூறி, அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இத்துடன் இன்றைய நிகழ்ச்சிகள் முடிவுற்றன. அவை மீண்டும் நாளை பிற்பகல் 4-00 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

(பிற்பகல் 6-38)

4. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. Statutory Rules and Orders.

Nil.

B. Reports, Notifications and Other Papers.

& 44 Detailed Agriculture Budget for the year 1975-76 (English).

&45 Detailed Roads and Bridges Budget for the year 1975-76. (English).

& 46 Detailed Irrigation Budget for the year 1975-76 (English).

& 47 Detailed Industries Budget for the year 1975-76. (English).

&48 Annual Financial Statement (Budget) of the Government of Tamil Nadu—Summary of the Financial Position 1973–74 (Accounts) (English and Tamil).

& Laid on the table of the House on 4th March 1975.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS